புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 PRGI.No.PNTAM/26/A7529 GSTIN: 33KXSPK6994Q1ZX

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com
ஆசிரியர்: K.சபியுல்லா

மலர்: 02 | இதழ்: 90 | 05-10-2026 | திங்கள் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி
Volum 02 | Issue: 90 | 05-10-2026 | Monday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## இந்திய பொருளாதாரத்தின் அடிப்படைகள் வலுப்பெற்று வருகின்றன : நிர்மலா சீதாராமன்



புதுடெல்லி: அக்.5–

இந்திய பொருளாதாரத்தின் அடிப்படைகள் வலுவாக இருப்பதோடு, வலுப்பெற்றும் வருகின்றன என்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் நடைபெற்ற கவுடல்யா பொருளாதார மாநாட்டில் உரையாற்றிய நிர்மலா சீதாராமன், "மாற்றங்கள் நிறைந்த காலத்தில், இந்திய பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையை இழக்காமல், அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ளும் திறனுடனும், அடுத்த அதிர்ச்சி வரும்போது அதையும் சமாளிப்பதற்கான திறனையும் கொண்டிருக்கிறது.

இந்திய பொருளாதாரத்தின் மீள்திறன் என்பது, உண்மையில் நிகழாத விளைவுகளில் உள்ளது. அதாவது, வலுப்பெறாத பணவீக்கம், எரிபொருள் நிலையங்களில் உருவாகாத வரிசை, வெளிப்படாத வங்கி நெருக்கடி, திணிக்கப்படாத நிதிக் கொள்கை திருத்தம் ஆகியவற்றில் இருந்தே நமது பொருளாதார மீள்திறனை நம்மால் மதிப்பிடலாம். இத்தகைய எதிர்நிலை உண்மைகளும், முக்கிய வளர்ச்சி விகிதத்தைப் போலவே பொருளாதார வல்லுநர்களின் கவனத்துக்கு உரியவை.

கடந்த நான்கு ஆண்டுகளில் ஏற்பட்ட அதிர்ச்சிகளை, தனது அடிப்படைகள் சிதையாமல் இந்தியா சமாளித்துள்ளது. 202627ம் நிதி ஆண்டின் முதல் காலாண்டில் இந்தியாவின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 7.8 சதவீதம். கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நுகர்வோர் விலைக் குறியீட்டுப் பணவீக்கம் 4.82 சதவீதம். முதல் காலாண்டில் நடப்புக் கணக்கு பற்றாக்குறை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.5 சதவீதம். அந்நிய செலாவணி கையிருப்பு 766 பில்லியன் டாலர். இவை நமது பொருளாதார மீள்திறனைக் காட்டுகின்றன." என தெரிவித்தார்.

## மேலும் 114 ரஃபேல் போர் விமானம் வாங்க மார்ச்சுக்குள் ஒப்பந்தம்: விமானப்படை தளபதி ஏ.பி.சிங் தகவல்

புதுடெல்லி: அக்.5–

விமானப்படை தினத்தை முன்னிட்டு நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் விமானப்படை தளபதி ஏர் சீஃப் மார்ஷல் ஏ.பி. சிங் பேசியதாவது:

பிரான்ஸிடம் இருந்து மேலும் 114 ரஃபேல் போர் விமானங்களை வாங்குவதற்கான பல்நோக்கு போர் விமானத் திட்டம் தொடர்பான பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

விலை நிர்ணயம் உள்ளிட்ட முக்கிய அம்சங்கள் குறித்து தற்போது விவாதிக்கப்பட்டு வருகின்றன. அனைத்தும் திட்டமிட்டபடி நடைபெற்றால், நடப்பு நிதியாண்டின் இறுதிக்குள் (மார்ச் 27) இந்த ஒப்பந்தத்தை இறுதி செய்ய முடியும்.

இந்திய விமானப்படையில் போர் விமானப் படைப்பிரிவுகளின் பலத்தை அதிகரிக்க அடுத்த சில ஆண்டுகளில் ஆண்டுதோறும் 36 முதல் 40 போர் விமானங்களை விமானப்படையில் சேர்க்க வேண்டிய தேவை உள்ளது.

சுமார் 20 ஆண்டுகளாக நிலுவையில் இருந்த 114 ரஃபேல் விமானக் கொள்முதல் திட்டத்துக்கு இந்த ஆண்டு பிப்ரவரியில் முதல்கட்ட ஒப்புதல் கிடைத்தது. பிரான்ஸ் அரசுடன் நேரடி ஒப்பந்தம் மூலம் இது மேற்கொள்ளப்பட உள்ளது. இந்திய விமானப்படையிடம் ஏற்கெனவே 36 ரஃபேல் விமானங்கள் உள்ளன.

புதிய 114 விமானங்களும் சேர்ந்தால், மொத்த ரஃபேல் விமானங்கள் எண்ணிக்கை 150 ஆக உயரும். இவ்வாறு அவர் கூறினார்.

## இஸ்ரேல் சுதந்திர தின விழாவில் பங்கேற்க பிரதமர் மோடி, விமானி ஸ்மித் மச்சாருக்கு அழைப்பு

டெல் அவிவ்: செப்.5–

இஸ்ரேலில் நடைபெறவுள்ள சுதந்திர தினக் கொண்டாட்டங்களின்போது, விழாவுக்கான சிறப்புச் சுடரை ஏற்றுமாறு இந்திய விமானி கேப்டன் ஸ்மித் மச்சார் மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோருக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அழைப்பு விடுத்துள்ளார்.

துபாயிலிருந்து டெல் அவிவ் சென்ற ப்ளைதுபாய் விமானத்தின் விமானி அறையில் நடந்த தாக்குதலில் காயமடைந்த கேப்டன் ஸ்மித் மச்சாரிடம் தொலைபேசியில் நலம் விசாரித்த இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் ஸ்மித் மச்சார் ஆகியோரை இஸ்ரேலுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

சனிக்கிழமையன்று நடைபெற்ற உரையாடலின் போது, விமான தாக்குதல் சம்பவத்தின்போது மச்சார் செயல்பட்ட விதத்தைப் பாராட்டிய நெதன்யாகு, நடைபெறவுள்ள இஸ்ரேல் சுதந்திர தின விழாவில் மச்சாரும் மோடியும் இணைந்து தீபத்தை ஏற்ற வேண்டும் என்று தான் விரும்புவதாகக் கூறினார்.

மச்சாரிடம் பேசிய நெதன்யாகு, "நீங்கள் இஸ்ரேல், இந்தியா மற்றும் ஒட்டுமொத்த உலகிற்கும் ஒரு கதாநாயகன். இஸ்ரேலின் சிறந்த நண்பர்களான கேப்டன் ஸ்மித் மற்றும் பிரதமர் மோடி ஆகியோர் சுதந்திர தின கொண்டாட்டத்தின் அடையாளமாகத் தீபத்தை ஏந்த வேண்டும் என்று விரும்புகிறேன். எங்கள் சுதந்திர தினத்தில் நாங்கள் அளிக்கும் மிக உயர்ந்த மரியாதை இதுவாகும்" என்று கூறினார்.

அதன்பிறகு, விமானத்தில் தாக்குதல் சம்பவம் எப்படி நடந்தது என்று நெதன்யாகு, மச்சாரிடம் கேட்டறிந்தார். பயணிகள் மற்றும் விமானக் குழுவினர் உள்ளே வருவதற்கு முன்பு விமானிகள் அறையில் என்ன நடந்தது என்பதை விமானி விவரித்தார். தாக்குதலின் போது விமானி மச்சார் செயல்பட்ட விதம் தன்னை மிகவும் ஈர்த்ததாகக் கூறிய நெதன்யாகு, விமானத்தில் இருந்தவர்களைப் பாதுகாக்க உதவியதற்காக அவருக்கு நன்றி தெரிவித்தார்.

மேலும், "உண்மையைச் சொல்லப்போனால், உங்கள் துணிச்சலையும், இக்கட்டான சூழலிலும் நீங்கள் வெளிப்படுத்திய நிதானமான முடிவெடுக்கும் திறனையும் கண்டு நான் வியக்கிறேன். நீங்கள் மிகுந்த துணிச்சலுடன் செயல்பட்டீர்கள்; பல உயிர்களைக் காப்பாற்றினீர்கள்.

தயவுசெய்து உங்கள் மனைவிக்கு என் வாழ்த்துகளைத் தெரிவியுங்கள். உங்களுக்கு ஒரு குடும்பம் இருப்பதையும், நீங்கள் உலகளாவிய குடும்பத்தின் ஒரு அங்கமாக இருப்பதையும் நான் அறிவேன். விரைவில் குணமடையுங்கள். நீங்கள் செய்த அனைத்திற்கும் நன்றி." எனத் தெரிவித்துள்ளார்.

தற்போது அபுதாபியில் மருத்துவச் சிகிச்சை பெற்று வரும் கேப்டன் மச்சார், சில நாட்களுக்கு முன்பு துபாயிலிருந்து டெல் அவிவ் சென்ற ப்ளைதுபாய் விமானத்தின் கட்டுப்பாட்டு அறையில் நடந்த தாக்குதலின்போது, 174 பயணிகளின் உயிரைக் காப்பாற்றியிருந்தார்.

## பெண்களை அவதூறாக பேசுபவர்களுக்கு வாக்களிக்கக் கூடாது"

### தாராபுரத்தில் முதல்வர் விஜய் பேச்சு



தாராபுரம்: அக்.5–

"பெண்களை இழிவாகவும் அவதூறாகவும் பேசுபவர்களுக்கு மக்கள் வாக்களித்து ஆதரிக்கக் கூடாது" என்று தாராபுரம் தேர்தல் பிரச்சாரத்தில் தவெக தலைவரும், முதல்வருமான விஜய் வலியுறுத்தினார்.

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் இடைத்தேர்தல் பிரச்சாரத்தின் கடைசி நாளான நேற்று (அக்.4) தமிழக வெற்றிக் கழக தலைவரும், தமிழக முதல்வருமான விஜய் பங்கேற்ற ரோடு ஷோ நடைபெற்றது.

சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் கோவை வந்த அவர் அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் தாராபுரத்தில் ஹெலிபேட் அமைந்துள்ள மாருதி நகருக்கு பகல் 12.45 மணியளவில் வருகை தந்தார்.

அவரது வருகையை அறிந்து நூற்றுக்கணக்கான தொண்டர்கள் திரண்டு அவரை வரவேற்றனர். அங்கிருந்து பிரச்சார வேனில் ஏறிய விஜய் அங்கு திரண்டிருந்த மக்களை பார்த்து கையசைத்து வணக்கம் தெரிவித்தார். வேட்பாளர் சத்யபாமாவுடன் திரண்டிருந்த பொதுமக்கள் மத்தியில் விசில் சின்னத்துக்கு வாக்களிக்கக் கோரி ஆதரவு திரட்டினார்.

தாராபுரம் நகரின் மையப் பகுதியில் திரண்டிந்த மக்களிடையே பேசிய அவர், "கடந்த சில தினங்களுக்கு முன் மதுராந்தகம் பகுதியில் சுற்றுப்பயணம் செய்து மக்களைச் சந்தித்தேன். அங்குள்ள நம் சொந்தங்கள் எனக்கு சிறப்பாக வரவேற்பளித்தனர். அதனைத் தொடர்ந்து, தற்போது தாராபுரம் சொந்தங்களைச் சந்திக்க வந்துள்ளேன்.

திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கு வாக்களிப்பது என்பது, பெண்களை அவதூறாகப் பேசுபவர்களை ஆதரிப்பதற்குச் சமம். நமது வீட்டு தாய்மார்களையும், சகோதரிகளையும் தரக்குறைவாகப் பேசுபவர்களை எந்தக் காலத்திலும் மன்னிக்கக் கூடாது.

தேர்தல் ஆதாயத்திற்காக மட்டும் நான் இதனைக் கூறவில்லை. அண்மையில் தாராபுரத்திற்கு வருகை தந்த திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் அவரது மகன் ஆகியோர் பேசிய பேச்சுகள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. சகோதரி சத்யபாமா குறித்து அவர்கள் பேசிய வார்த்தைகள் காது கொடுத்து கேட்க முடியாத அளவுக்கு மிகவும் மோசமாக அமைந்துள்ளன.

என்னைப் பற்றி யார் என்ன விமர்சனம் செய்தாலும் அதை நான் பொறுத்துக் கொள்வேன். ஆனால், நம் வீட்டுப் பெண்களையோ அல்லது நம் வீட்டில் உள்ள அம்மாவையோ, சகோதரிகளையோ இழிவாகப் பேசினால் நிச்சயம் சும்மா இருக்க மாட்டேன்.

திமுகவினரின் இது போன்ற தரமற்ற பிரச்சாரங்கள் இன்று நேற்றல்ல எம்ஜிஆர் காலத்தில் இருந்தே இவ்வாறு தான் உள்ளது. இந்த இடைத்தேர்தலில் அவர்களுக்கு தக்க பாடம் புகட்ட வேண்டும். விசில் சின்னத்தில் வாக்களித்து சகோதரி சத்யபாமாவை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியடைச் செய்ய வேண்டும்." என தெரிவித்தார்.

இன்று வழக்கத்தை காட்டிலும் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. ஆனாலும் வழி நெடுகிலும் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு விஜய்க்கு வரவேற்பளித்தனர். அப்போது தாராபுரம் அமராவதி ஆற்று பாலம் அருகில் வந்தபோது பிரச்சார வேனில் இருந்து இறங்கிய அவர், விவசாயி நிறுத்தி இருந்த ரேக்ளா வண்டியில் ஏறி அமர்ந்து சில அடி தூரம் அதில் சவாரி செய்தார்.

இதே போல தொண்டர்கள் அளித்த பரிசு பொருள்களை பெற்றபடி அவரின் பிரச்சார பயணம் தொடர்ந்தது. பெண்கள் ஆரத்தி எடுப்பதை அறிந்து அங்கு வாகனத்தை நிறுத்தி, கீழே இறங்கிச் சென்று ஆரத்தி மரியாதையை ஏற்றுக் கொண்டார். பெண்கள் அவருக்கு திருஷ்டி பொட்டு வைத்த போது, அவரும் பதிலுக்கு ஆரத்தி எடுத்த பெண்களுக்கு திருஷ்டி பொட்டு வைத்தார். இதைக் கண்டு கூடியிருந்தவர்கள் உற்சாகம் அடைந்தனர்.

மூலனூர் செல்லும் வழியில் அலங்கரிக்கப்பட்ட காங்கயம் காளை மாடுகள் நிறுத்தியிருப்பதைக் கண்ட அவர் வாகனத்தில் இருந்து இறங்கி சென்று காளைகளுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார். சில இடங்களில் மக்கள் அவர் மீது பூக்களை வாரி இறைத்தனர். இதனால் பிரச்சார வாகனத்தின் முன் பகுதி மலர்களால் நிரம்பி வழிந்தது.

விஜய்யின் தனி பாதுகாவலர் அவ்வப்போது பையில் இருந்த பூக்களை விஜய்யிடம் கொடுக்க அவர் பூக்களை கூடியிருந்த மக்கள் மீது தூவி பரவசப்படுத்தினார். கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல் வழி நெடுகிலும் பல லட்சம் பேர் திரண்டு நின்று வரவேற்றது தாராபுரம் தொகுதியின் இறுதிக் கட்ட பிரச்சாரத்தை திசை மாற்றும் நடவடிக்கையாக இருந்தது.

## திமுகஅதிமுக கூட்டணி என்று சொல்லி ஏமாற்றப் பார்க்கிறார்கள்" ஸ்டாலின்

சென்னை: அக்.5–

"திமுக.வும் அதிமுக.வும் கூட்டணி அமைக்க முயன்றதாக இல்லாத ஒரு கதையைச் சொல்லி மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். உண்மையில், தன்னை வளர்த்து ஆளாக்கிய கட்சியையே ஒழிப்பதற்கு ஆளுங்கட்சி வேட்பாளர் செய்த துரோகத்தின் விளைவுதான் இந்த இடைத்தேர்தல்." என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தாராபுரம் மற்றும் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலையொட்டி ஸ்டாலின் சமூக வலைதளங்களில் காணொளி வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறி இருப்பதாவது:

"வாக்காளப் பெருமக்களுக்கு வணக்கம். தேர்தல் முடிந்து நான்கு மாதங்கள்தான் ஆகின்றன. அதற்குள் உங்கள் தொகுதி இடைத்தேர்தலைச் சந்திக்கிறது. இந்த இடைத்தேர்தலுக்கான அவசியம் என்ன என்பதை ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள்.

இந்நேரம் எல்லா தொகுதிகளிலும் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதிகளுக்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், உங்களுக்கு உண்மையாக இருப்பார் என்று நினைத்து நீங்கள் தேர்ந்தெடுத்த வேட்பாளர் என்ன செய்திருக்கிறார்?

மீண்டும் உங்களிடமே வாக்கு கேட்டு வந்து நிற்கிறார். அவரது இந்தச் செயலில் ஏதாவது நியாயம் இருக்கிறதா? கொள்கை நேர்மை இருக்கிறதா? ஒரு துளியாவது உங்கள் நலன் இருக்கிறதா?

வாக்களித்த உங்களது தன்மானத்தை விலைபேசி, ஆளுங்கட்சியின் குதிரைபேரத்துக்குப் துணைபோனவர்களுக்கு நீங்கள் என்ன பதிலடி தரப்போகிறீர்கள்? வாக்குகளுக்காக உங்களை மீண்டும் ஏமாற்ற அவர்கள் சொல்லும் கட்டுக்கதைகளையும் பொய்களையும் நம்பப் போகிறீர்களா?

உங்கள் தொகுதியில் ஆளுங்கட்சி வேட்பாளராகப் போட்டியிடுபவர், பெட்டி வாங்கிவிட்டு உங்களிடம் நடிப்பதற்கு என்ன காரணம் சொல்கிறார்? ஆளுங்கட்சியில் சேர்ந்தால்தான் மக்களுக்கு நன்மை செய்ய முடியும் என்று நடிக்கிறார்கள். அதுவா உண்மை?

ஆளும்கட்சியாக இருந்தால்தான் நல்லது செய்ய முடியும் என்றால், எல்லா ஆட்சியிலும் எதிர்க்கட்சிகளில் இருக்கும் அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் பதவியை ராஜினாமா செய்துவிட்டு ஆளுங்கட்சிக்குச் சென்றிருக்க வேண்டுமே.

எதிர்க்கட்சி உறுப்பினர் பிரதிநிதித்துவப்படுத்தும் தொகுதி என்பதற்காக எந்த ஓர் அரசும் அந்தத் தொகுதியைப் புறக்கணிக்க முடியாது என்பதுகூட உங்களுக்குத் தெரியாது என்று நினைத்து ஏமாற்றப் பார்க்கிறார்களா?

அடுத்து, திமுக.வும் அதிமுக.வும் கூட்டணி அமைக்க முயன்றதாக இல்லாத ஒரு கதையைச் சொல்லி மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். உண்மையில், தன்னை வளர்த்து ஆளாக்கிய கட்சியையே ஒழிப்பதற்கு ஆளுங்கட்சி வேட்பாளர் செய்த துரோகத்தின் விளைவுதான் இந்த இடைத்தேர்தல்.

இங்கு பிரச்சாரத்திற்கு வந்த முதல்வர் விஜய் தொடங்கி அமைச்சர்கள் வரை யாராவது, "நாங்கள் வாக்குறுதி அளித்த மகளிருக்கான 2,500 ரூபாயைக் கொடுத்துவிட்டோம்; ஆண்டுக்கு ஆறு சிலிண்டர்களை உங்களுக்கு வழங்கிவிட்டோம் பாருங்கள்" என்று சொல்லி வாக்குக் கேட்டார்களா? இல்லையே.

ஏனென்றால், த.வெ.க. ஆட்சி என்பது மக்களாகிய உங்களுக்கு நன்மை செய்வதற்காக அமைந்த ஆட்சி அல்ல; மாஃபியா கும்பல்கள் தமிழகத்தை கொள்ளையடிப்பதற்காக அமைந்துள்ள ஆட்சி. தமிழகத்தை பின்னோக்கி அழைத்துச் செல்லப் போகிறார்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்தச் சொன்னால், முதல்வர் விஜய், ஜோசியரின் ஆலோசனையைக் கேட்டு 1,200 கோடி ரூபாயில் தலைமைச் செயலகம் கட்டுவார். விவசாயிகள், மீனவர்கள், அரசு ஊழியர்கள் போராடினால் அதைப் பற்றிக் கவலைப்படாமல் லண்டனுக்குச் சென்று கார் பந்தயம் பார்ப்பார்.

கொத்துக் கொத்தாகக் கொலைகள் நடந்தால் அதைப் பற்றிக் கவலைப்படாமல் "சிங்கப்பெண் படை" என்று ரீல்ஸ் வெளியிடுவார். இப்போதைக்கு அவர்களது கவனம் முழுவதும், ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக எப்படி சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கலாம் என்பதில்தான் இருக்கிறது.

எனவே, நான் உங்களிடம் கேட்டுக்கொள்வது ஒன்றுதான். பிரச்சாரத்திற்கு வந்த ஆளுங்கட்சி வேட்பாளர்களை ஊருக்குள்ளேயே அனுமதிக்காமல் எப்படி விரட்டினீர்களோ, அதேபோன்று வரும் 6ம் தேதி உங்கள் வாக்குகளால் அவர்களுக்குத் தோல்வியைக் கொடுத்து விரட்டியடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மக்களுக்கு எப்படிப்பட்ட பிரச்சினைகள் வந்தாலும் ரீல்ஸ் போட்டும், பொய்யான கதைகளைச் செய்திகளாக்கியும் மக்களை ஏமாற்றிவிடலாம் என்று நினைக்கும் தவெக.வுக்கு, மக்களாகிய நீங்கள் இந்தத் தேர்தலில் ஏமாற்றத்தைத் தர வேண்டும்.

ஆளுங்கட்சியின் ஆணவத்துக்கும் அதன் வேட்பாளரின் துரோகத்துக்கும் நீங்கள் சரியான பாடம் புகட்டினால்தான், மீண்டும் நமது தமிழகத்தில் எங்கேயும் இதுபோன்ற அநியாயம் நடைபெறாது.

உங்களுக்காகவும், தொகுதியின் வளர்ச்சிக்காகவும், மிக முக்கியமாக உங்களுக்கு உண்மையாக இருந்து மக்கள் பணியாற்றவும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தாராபுரத்தில் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மதுராந்தகத்தில் போட்டியிடும் வழக்கறிஞர் இ.பரந்தாமனுக்கும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.



ஈரோடு மாவட்டம், சென்னிமலை பேரூராட்சியில் சுதந்திரப போராட்டத்தியாகி கொடிகாத்த குமரன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அன்னாரது இல்லத்தில் அவருடைய திருவுருவப் பட்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி, மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சண்முகன், காங்கேயன் சட்டமன்ற உறுப்பினர் நடராஜ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன், சென்னிமலை பேரூராட்சித்தலைவர் ஸ்ரீதேவி உட்படபலர் உள்ளனர்.

# தனியார் தொழிற்சாலைகளில் உள்ளூர் இளைஞர்களுக்கு 75% வேலைவாய்ப்பு சட்டம்: சவுமியா அன்புமணி வலியுறுத்தல்

தூத்துக்குடி: அக்.5–

தூத்துக்குடி, நெல்லை மாவட்டங்களில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக பாமக எம்எல்ஏ சவுமியா அன்புமணி நேற்று தூத்துக்குடி விமான நிலையம் வந்தார். அப்போது அவர் அளித்த பேட்டி: தூத்துக்குடி மாவட்டத்திற்கு வந்திருக்கும் நாங்கள், நாளை நெல்லை, நாகர்கோவில் செல்ல உள்ளோம். நாளை தாமிரபரணி ஆறு குறித்து சிறிய ஆய்வு செய்ய உள்ளோம். தாமிரபரணி ஆற்றில் நிறைய கழிவுகள் கலக்கிறது. அது எல்லாருக்கும் தெரியும். தாமிரபரணி ஆறு பாதுகாப்பு குறித்து சட்டமன்றத்தில் பேசியிருந்தோம்.



அதில் எப்படி கழிவுகள் கலக்கிறது. எப்படி சரி செய்யலாம். கழிவுகள் கலப்பதை எப்படி நிறுத்தலாம். அதில் சுத்திகரிப்பு சரியாக உள்ளதா என்பதை ஆய்வு செய்ய வந்துள்ளோம். தனியார் தொழிற்சாலைகளில் உள்ளூர் இளைஞர்களுக்கு மட்டும் வேலைவாய்ப்பு உறுதி செய்ய வேண்டும். 75 சதவீதம் உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற தேர்தல் வாக்குறுதியை சட்டமாக கொண்டுவர வேண்டும் என்பது எங்களுடைய விருப்பம். இவ்வாறு அவர் கூறினார்.

## அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்முன்னாள் முதல்வர்கள் எம்.ஜி.ஆர். ஜெயலலிதா இருவர்களின் ஆசியுடன், எம்.ஜி.ஆர். வேடமிட்டு சீதாபுரம் ஊராட்சியில் வாக்கு சேகரிப்பு;



கழகப் பொதுச் செயலாளர் தமிழக முன்னாள் முதல்வர் புரட்சித் தமிழர் எடப்பாடி யார் ஆணைப்படி, விழுப்புரம் மாவட்ட கழக செயலாளர் இரா பசுபதி ஆலோசனைப்படி, மதுராந்தகம் தொகுதி பூத்:எண்; 202சீதாபுரம் ஊராட்சியில், "விழுப்புரம் மாவட்ட கழக அமைப்பு செயலாளர் செஞ்சி சேவல் ஏழுமலை, (முன்னாள்) நாடாளுமன்ற, பாராளுமன்ற உறுப்பினர் தலைமையில், மதுராந்தகம் இடைத்தேர்தல் சீதாபுரம் ஊராட்சியில், எம்.ஜி.ஆர்.வேடமிட்டு,

கழக நிர்வாகிகளுடன் சீதாபுரம் ஊராட்சியில் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இந்நிகழ்ச்சியில் செஞ்சி கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் லட்சுமி காந்தன், ஒலக்கூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் தனசேகரன், மாவட்ட பாசறை செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட பாசறை துணைத் தலைவர் எஸ்.வி.ஆர். தமிழ்வாணன், பாட்டாளி ஏ. எஸ்.சுரேஷ், மற்றும் சீதாபுரம் கிளைக் கழக செயலாளர் கலையரசன், காலனி கிளை கழக செயலாளர் சுப்பிரமணி, மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே மாங்குடி கிராமத்தில் உள்ள ஸ்ரீதேவி பூதேவி சமய சுந்தர பெருமாள் ஆலய திருவிழாவை முன்னிட்டு மாபெரும் மாட்டு வண்டி பந்தயம் நடைபெற்றது

இந்த போட்டியில் மதுரை, திருச்சி,தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட மாடுகள் போட்டியில் கலந்து கொண்டன,

இதில் பெரிய மாடு, சின்னமாடு என இரு பிரிவுகளாக நடைபெற்றது, இதில் 100க்கும் மேற்பட்ட மாடுகள் போட்டியில் கலந்து கொண்டன, இரட்டை மாட்டு வண்டிகள் கலந்து கொண்டு நிர்ணயிக்கப்பட்ட பந்தய இலக்கினை நோக்கி ஒன்றையொன்று முந்திச் சென்றன, போட்டியில் வெற்றி பெற்ற ஒவ்வொரு பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களை பிடித்த மாட்டின் உரிமையாளர்களுக்கு 1லட்சத்தி, 45 ஆயிரம் ரொக்கப்பரிசும் கோப்கைகளும் வழங்கப்பட்டது, பந்தய நிகழ்ச்சியை காண சாலையின் இரு புறமும் பல ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரசிகர்கள் கண்டு ரசித்தனர், அறந்தாங்கி போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# அறந்தாங்கி இரயில் நிலையத்தில் இறக்குமதி கிடங்கு மீண்டும் அமைத்து தரவேண்டும்.

## அறந்தாங்கி வர்த்தக சங்க பொதுக்குழு தீர்மானம்




அறந்தாங்கி,அக்.05

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி இரயில் நிலையத்தில் பல தசாப்தங்களாக இயக்கி வந்த இறக்குமதி கிடங்கு மீண்டும் அமைத்து தரவேண்டும் என அறந்தாங்கி வர்த்தக சங்க பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தலைவர் தங்கதுரை தலைமையில் முன்னாள் தலைவர் ரவீந்திரகுமார் முன்னாள் செயலாளர் காந்திநாதன், முன்னாள் பொருளாளர் கிருஷ்ணசாமி, செயற்குழு உறுப்பினர் ராசி எல். மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் வர்த்தக மூத்த தலைவர் கலியபெருமாள் கொடியேற்றி துவங்கி வைத்தார்.

வர்த்தக சங்க முன்னாள் செயலாளர் மற்றும் பெரிய பள்ளிவாசல் தலைவருமான டிஏஎன்பீர்சேக்அனைவரையும் வரவேற்றார். சங்கத்தின் செயலாளர் செலக்சன் சுரேஷ்குமார் ஆண்டு அறிக்கை வாசித்து தீர்மானங்களை முன்மொழிந்தார். பொருளாளர் முகமது ஹாரிஸ் ஆண்டு வரவு செலவு கணக்கு வாசித்தார்.

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநில துணை தலைவரும் புதுக்கோட்டை மாவட்ட தலைவருமான சாகுல் ஹமீது பொதுக்குழு சிறப்புரையாற்றி கல்வி மற்றும் மருத்துவ நலத்திட்ட உதவிகளை துவங்கி வைத்தார். மாவட்ட செயலாளர் கதிரேசன், துணை தலைவர் சாந்தம் எஸ். சவரிமுத்து, இணைச் செயலாளர் ஆரோக்கியசாமி, பொருளாளர் ராஜா முகமது ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். முன்னதாக தமிழ்நாடு மெர்க்ண்டல் வங்கி சார்பாக வர்த்தக நிறுவனங்களுக்கு 50 லட்சம் வரை தொழில் கடன் வழங்கும் முகாம், சஞ்சீவி ரத்தப் பரிசோதனை நிலையம் சார்பில் மருத்துவ முகாம், ஆரஞ்சு கண் பரிசோதனை நிலையம் சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம், டிகே பல் மருத்துவமனை சார்பில் இலவச பல் பரிசோதனை முகாம் ஆகிய சேவை முகாம்கள் நடைபெற்றன.

அறந்தாங்கியிலிருந்து புதுக்கோட்டை வழியாக திருச்சிக்கு ரயில் போக்குவரத்து வேண்டும்.

கட்டுமாவடி சாலையில் ரயில் மேல் நிலை பாலம் வேண்டும். 12 தேதி யுபிஐ பண பரிவர்த்தனை புறக்கணிக்க வேண்டும். அறந்தாங்கி வர்த்தக சங்கத்திற்கு நிதி தரும் அனைவரும் வர்த்தக சங்க உறுப்பினர்களாக பதிவு செய்யப்படுவார்கள். அறந்தாங்கி வர்த்தக சங்கத்தின் மகளிர் அணி உருவாக்கப்பட்டுள்ளது போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பல தசாப்தங்களாக சிறப்பாக வர்த்தகம் செய்து வரும் 30 நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கப்பட்டன.

அறந்தாங்கி வர்த்தக சங்கத்தின் துணை சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் கோட்ட சங்கங்களின் தலைவர்களான ஆவுடையார் கோவில் நடராஜன், அனவயல் சுரேஷ், மணமேல்குடி சோனக்கருப்பன், கோட்டைப்பட்டினம் அப்துல் ஹமீது, திருவாப்பாடி தம்பித்துரை, கட்டுமாவடி சிராஜுதீன், பெருங்காடு ஆசைத்தம்பி, மீமிசல் அபுபக்கர், நாகுடி துரை. காளிதாஸ், வெளியாத்தூர் இராமசுப்பிரமணியன், கொத்தமங்களம் வாசு, கீரமங்கலம் ராஜேந்திரன், கரூர் ஹக்கீம், துரையரசபுரம் பிரபு ஆகியோர் தலைமையில் வர்த்தகர்கள் கலந்துக்கொண்டனர். இறுதியாக துணை தலைவர் பன்னீர் செல்வம் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# நெற்பயிர் காப்பீடு செய்ய நவ.15ம் தேதி கடைசி நாள்: கலெக்டர் தகவல்

திருவள்ளூர்: அக்.5–

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகளுக்கு நெற்பயிர் காப்பீடு செய்ய நவம்பர் 15ம் தேதி கடைசி நாள் என்று கலெக்டர் கவிதா தெரிவித்துள்ளார். திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் ச.கவிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: திருவள்ளூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் அக்ரிகல்சர் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிட் என்ற காப்பீட்டு நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2026 சம்பா நெற்பயிருக்கு காப்பீடு கட்டணமாக ஒரு ஏக்கருக்கு ரூ.545 மட்டும் செலுத்தி விவசாயிகள் காப்பீடு செய்துகொள்ளலாம். பயிர் காப்பீடு செய்ய நவம்பர் 15ம் தேதி கடைசி நாளாகும்.




விவசாயிகள் நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாளான 15.11.2026க்குள் பயிர் காப்பீடு செய்ய அறிவுறுத்தப்படுகிறது.

நடப்பு ஆண்டில் எல் நினோ காலநிலை காரணமாக மழை பொழிவில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அதிகமான வெப்பத்தால் நிலத்தடி நீர் குறையவும், மேலும் சில சமயங்களில் அளவிற்கு அதிகமாக மழை பொழிவும் ஏற்பட வாய்ப்பும் உள்ளது. எனவே, சம்பா பருவத்தில் பயிர் செய்துள்ள நெல் பயிர்கள் மற்றும் இதர பயிர்களுக்கு போதுமான தண்ணீர் கிடைக்காமல் வறட்சியால் மகசூல் பாதிப்பும் அளவிற்கு அதிகமான மழையினால் பயிர் சேதாரமும் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளதால் அனைத்து பயிர் காப்பீடு செய்து பயன்பெற விவசாயிகளும் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

எனவே, சம்பா பருவத்தில் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களிலோ, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலோ, பொது சேவை மையங்களிலோ (இ சேவை மையங்கள்) நேரிடையாக, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் உரிய காப்பீடு கட்டணம் செலுத்தி காப்பீடு செய்து கொள்ளலாம்.

விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும்போது, விண்ணப்பத்துடன் நடப்பு பசலிக்கான அடங்கல், கணினி சிட்டா, வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து காப்பீட்டு கட்டணத் தொகையை செலுத்திய பின் அதற்கான ரசீதையும் இணைக்க வேண்டும். பதிவு செய்த விவரங்கள் அனைத்தும் சரியாக உள்ளதா என விவசாயிகள் உறுதி செய்துகொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு தங்களது பகுதியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்புகொண்டு பயன்பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சேலம் ஏற்காட்டில் காபி விளைச்சல் உயர்வு விற்பனையும் அமோகம்.



சேலம். அக்.5–

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் கடந்த ஆண்டு அரபிக்கா காஃபி விளைச்சல் 4 ஆயிரம் மெட்ரிக் டன்னாக இருந்தது. நடப்பாண்டு 4,150 மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளதால் தோட்ட அதிபர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

காஃபி தேவை அதிகரித்துள்ள நிலையில் விற்பனை அமோகமாக நடந்து வருகிறது.

கிழக்கு தொடர்ச்சி மலையில் இயற்கை எழில் கொஞ்சும் சேர்வராயன் மலைத்தொடர் கடல் மட்டத்தில் இருந்து 5„200 அடி உயரத்தில் அமைந்துள்ளது. ஏற்காடு மலை சுற்றுலா தலமாக மட்டுமல்லாமல் இந்திய அளவில் காஃபி உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஏற்காட்டில் ஆண்டு முழுவதும் குளுமையான ஒரே சீதோஷ்ண நிலை நிலவுவதால், காஃபி உற்பத்தி அமோகமாக உள்ளது. இங்கு அரபிக்கா, ரொபஸ்டா ஆகிய இரண்டு வகையான காஃபி பயிர் விளைகிறது. அதிகளவு அரபிக்கா வகை காஃபி விளைவிக்கப்படுகிறது. இங்கு விளையும் காஃபிக்கு உலக அளவில் வர்த்தக வரவேற்பு உள்ளது.

உயரம் குறைந்த மலைப்பகுதியான ஏற்காடு, கொல்லிமலை, கல்வராயன் மலையில், ஆண்டுதோறும் காஃபி உற்பத்தி அமோகமாக நடக்கிறது. கடந்த 202425ம் ஆண்டில் ஏற்காட்டில் அரபிக்கா 4,000 மெட்ரிக் டன்னும், ரொபஸ்டா 25 மெட்ரிக் டன்னும் உற்பத்தியானது. 202526ம் ஆண்டில் அரபிக்கா 4,150 மெ.டன்னும், ரொபஸ்டா 25 மெ.டன்னும் உற்பத்தியாகியுள்ளது.

காஃபி தோட்டத்தில் ஊடுபயிராக மிளகு வளர்க்கப்படுவதால், விவசாயிகள் இரட்டிப்பு லாபம் ஈட்ட ஏதுவாக அமைந்துள்ளது. இந்தியாவில் பயிராகும் காஃபி சர்வதேச அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்தியாவில் ஆண்டு தோறும், 3 லட்சம் டன்னுக்கு மேல் காஃபி உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், கடந்த 2023ம் ஆண்டு 3.76 லட்சம் டன்னும், 2024ம் ஆண்டு 4.03 லட்சம் டன்னும் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில், காஃபி ஏற்றுமதி மூலம் ஆண்டுக்கு சராசரியாக, ரூ.2,500 கோடி அந்நிய செலாவணி ஈட்டப்படுகிறது. காஃபி தொழிலை மேம்படுத்த விவசாயிகளுக்கு மானிய கடனுதவி திட்டம் மூலம் நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

கிழக்கு தொடர்ச்சி மலையான ஏற்காடு, சேர்வராயன் மலை, கொல்லிமலைப் பகுதியில் அதிகளவு காஃபி விவசாயிகள் உள்ளனர். ஏற்காட்டில், 5,100 ஹெக்டேர் பரப்பளவில் காஃபி பயிரிடப்பட்டுள்ளது. ஆண்டுக்கு சராசரியாக, 3,000 முதல், 4,000 டன் வரை காஃபி உற்பத்தி செய்யப்படுகிறது. காஃபி தோட்ட தொழிலில், 2,197 விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

கொல்லிமலையில், 736 ஹெக்டேர் நிலப்பரப்பளவில் காஃபி விவசாயம் நடந்து வருகிறது. ஆண்டுக்கு சராசரியாக 400 டன் முதல், 500 டன் வரை காஃபி உற்பத்தி செய்யப்படுகிறது. சேர்வராயன் மலை, கொல்லிமலையில் 5,836 ஹெக்டேரிலும், கல்வராயன் மலை, தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், திருச்சி ஆகிய இடங்களில் 142 ஹெக்டேர் நிலப்பரப்பில் காஃபி உற்பத்தி செய்யப்படுகிறது.

தற்போது ரொபஸ்டா சந்தை மண்டி விலை சராசரியாக கிலோவுக்கு ரூ.209 என்ற அளவில் தொடங்குகிறது. மொத்த விற்பனையில் 50 கிலோ மூட்டை ரூ.10,000 வரை தரத்தைப் பொறுத்து வர்த்தகம் செய்யப்படுகிறது. அரபிக்கா கிலோ ஒன்றுக்கு ரூ.460 முதல் ரூ.655 வரை (பச்சை/தரமான கொட்டைகள்)விற்கப்படுகிறது.

பிரீமியம் அல்லது வறுத்த பிய்பெர்ரி போன்ற வகைகள் கிலோ ரூ.1,300க்கும் மேல் வரை விற்பனையாகின்றன. காஃபி உற்பத்தியைக் காட்டிலும் தேவை கூடுதலாக உள்ளதால், வரும் மாதங்களில் காஃபி விலை உயரக்கூடும் என விவசாயிகள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

காஃபி தொழில் லாபகரமானதாக உள்ளதால், இத்தொழிலில் ஈடுபடும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்து, ஆர்வமுடன் செயலாற்றி வருகின்றனர். இளைஞர்களிடம் இன்ஸ்டன்ட் காஃபி அருந்தும் பழக்கம் அதிகரித்துள்ளதால், காஃபி தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், அதன் விற்பனை அமோகமாக இருந்து வருவதாக காஃபி எஸ்டேட் அதிபர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

# புதுச்சேரி தட்டாஞ்சாவடி இடைத்தேர்தலில் மக்கள் நலனை மறந்த எந்த கட்சிக்கும் ஆதரவு இல்லை : ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகம் அறிவிப்பு.!!!.



புதுச்சேரி. அக்.5–

புதுச்சேரி ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மாநில தலைவர் ஆர்.எல். வெங்கட்ராமன் வெளியிட்டுள்ள அறிக்கையில், புதுச்சேரியில் ஆளும் கூட்டணி அரசின் செயல்பாடுகள் அனைத்தும் மன்னர் ஆட்சி செய்வது போன்று முதலமைச்சர் செயல் படுகிறார். அவரை கேள்வி கேட்கக்கூடிய வலுவான எதிர்க்குரல் அரசியல் களத்தில் இல்லை .

முதலமைச்சர் என். ரங்கசாமி அவர்கள் இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நிலையில், தட்டாஞ்சாவடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ததால் தற்போது அந்த தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

மக்களின் வரிப்பணத்தில் மீண்டும் இடைத்தேர்தல் நடத்தப்படும் நிலை ஏற்பட் டுள்ளது. ஆகவே மக்களுக்கான ஆட்சியை உருவாக்க இந்த இடைத்தேர்தலில் அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து பொது வேட்பாளரை அறிவித்து என். ஆர். காங்கிரசை தோற்கடிக்கவேண்டும் என்று கேட்டு கொண்டேன். ஆனால் எந்த எதிர் கட்சிகளும் அதற்கு செவி சாய்க்கவில்லை. மாறாக மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதை விட அரசியல் வாதிகள் பதவிகளுக்காக போட்டியிடுவதையே விரும்புகின்றனர்.

சபாநாயகர் பதவி யாருக்கு என்பதில் ஆளும் தரப்புக்குள் போட்டி,

அமைச்சர் பதவி, நியமன எம்.எல்.ஏ. பதவி உள்ளிட்ட பல்வேறு பதவிகளில் அரசியல் பேரம் நடை பெற்று வருகிறது.

தட்டாஞ்சாவடி இடைத் தேர்தலைப் பொறுத்தவரை, காங்கிரஸ் மற்றும் திமுக உள்ளிட்ட கட்சிகள் சார்பில் வேட்பாளர்கள் களமிறக்கப் பட்டுள்ள நிலையில், தற்போதைய இடைத்தேர்தலில் 11 வேட்பாளர்கள் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.

தட்டாஞ்சாவடி தொகுதி முதலமைச்சரின் தொகுதி என்று ஆளும் தரப்பினர் கூறிவரும் நிலையில், அந்த தொகுதியில் சாலை, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் முழுமையாக நிறைவேற்றப் படவில்லை .

மேலும், எதிர்க்கட்சிகளுக்கு வாக்களித்தால் என்ன நடக்கும் என்பது குறித்து முதலமைச்சர் விமர்சனமாக பேசுவது மக்களை கேலிக் கூத்தாக்குவதாக உள்ளது. வேட்பாளர்களின் குறைகளை சுட்டிக்காட்டி வாக்கு கேட்பதை விட, மக்களுக்கான திட்டங்களை முன்வைத்து வாக்கு கேட்க ரங்கசாமி தவறி விட்டார்.

புதுச்சேரியில் தொடர்ந்து சட்டம்ஒழுங்கு தொடர்பான பிரச்சினைகள் எழுந்து வரும் நிலையில், இடைத்தேர்தலுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதில் அரசு கவனம் செலுத்த தவறி விட்டது.

மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் நலத்திட்டங்களை முழுமையாக வழங்கி, அதன் அடிப்படையில் மக்களின் ஆதரவை பெறுவதே ஒரு நல்ல அரசியல் தலைமைக்கு அழகு . அதை எந்த ஒரு அரசியல் கட்சிகளும் கடைபிடிக்கவில்லை. இந்த இடைத்தேர்தலில் மக்கள் விரோத ஆட்சியை நடத்தும் என் . ஆர். காங்கிரசை தோற்கடிக்க அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயல் பட வேண்டும் என்று ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் கோட்பாட்டை எந்த கட்சிகளும் ஏற்காத காரணத்தினால் இந்த இடைத்தேர்தலில் எந்த அரசியல் கட்சிக்கும் ஆர். எல்.வி. மக்கள் முன்னேற்றக் கழகத்தின் ஆதரவு இல்லை என்பதை இதன் மூலம் தெரிவித்து கொள்கிறேன்.

மேலும் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டுகிறேன்.

இவ்வாறு மாநில தலைவர் ஆர்.எல். வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்.

# திருச்சி கேர் பொறியியல் கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு 'Alumni Meet '26'




திருச்சி. அக் 5

திருச்சி கேர் பொறியியல் கல்லூரியில் (CARE College of Engineering) முன்னாள் மாணவர்கள் சந்திப்பு 'Alumni Meet '26' நிகழ்வு கல்லூரி வளாகத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு கேர் கல்வி குழுமங்களின் முதன்மை நிர்வாக அதிகாரி (சிணிளி) ப்ரதிவ் செந்த் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் சாந்தி முன்னிலை வகித்தார். மேலும் இந்நிகழ்வில் கல்லூரி புலன்மையாளர்கள், அனைத்துத் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் திரளான முன்னாள் மாணவர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

முன்னாள் மாணவர்களை வரவேற்கும் பதிவுகளுடன் நிகழ்வு தொடங்கியது. தொடர்ந்து துறை சார்ந்த உரையாடல்கள், சுவாரஸ்யமான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பழைய நினைவுகளையும் நட்பையும் புதுப்பிக்கும் வகையில் அமைந்த இந்த விழாவில், கல்லூரி நிர்வாகத்தினர், பேராசிரியர்கள் மற்றும் திரளான முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாலை குழு புகைப் படங்கள் எடுக்கப்பட்டு, இரவு சுவையான விருந்துடன் விழா நிறைவுற்றது.



திண்டுக்கல் மாவட்ட ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தூய்மைப்பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன்ஆத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இளையராஜா , சக்திவடிவேல் முருகன் உட்பட பலர் உள்ளனர்.

# இலங்கை கடற்படை மீண்டும் அட்டூழியம் ராமேஸ்வரம் மீனவர்கள் 9 பேர் சிறைபிடிப்பு

ராமேஸ்வரம்: அக்.5–

ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து நேற்று 300க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மீன்பிடி அனுமதி டோக்கன் பெற்று பாக் ஜலசந்தி கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றன. மீனவர்கள் தனுஷ்கோடி, ஓலைக்குடா பகுதியில் இந்திய கடல் எல்லையோரம் மாலையில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.வரலாறு அறிவீர்

அப்போது ரோந்து வந்த இலங்கை கடற்படையினர் எடிசன் புரோகர் என்பவரின் விசைப்படகை சுற்றி வளைத்தனர். அதிலிருந்த ராமேஸ்வரத்தை சேர்ந்த எபிஸ்டன் (29), மத்தியா (22), ஜார்ஜ் ஜெய்சன் (25), ஸ்டீபன்சன் (23), சுவாடன் (25), அனீஸ்டன் (27), மோபிஸ் (21), அந்தோணி பிரதீப் (26), அந்தோணி ப்ரூக்ஸ் ஆகிய 9 பேரை படகுடன் சிறைபிடித்து மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

# பாகிஸ்தானுக்கு உளவு பார்த்ததாக இந்திய கடற்படை அதிகாரி கோவையில் கைது

கோவை: அக்.5–

பாகிஸ்தானை சேர்ந்த பெண் உளவுத்துறை அதிகாரிக்கு கடற்படை தகவல்களைக் கசியவிட்ட புகாரில் கோவை ஐஎன்எஸ் அக்ரானியில் பயிற்சிக்கு வந்த மேற்கு வங்கத்தைச் சேர்ந்த கடற்படை அதிகாரி பிரதீப் முகர்ஜி கைது செய்தனர். சமூக ஊடகங்களில் தொடர்புகொண்ட உளவாளியிடம் கடற்படை தகவல்களை பகிர்ந்துள்ளார் பிரதீப் முகர்ஜி. கைது செய்யப்பட்ட கடற்படை மாலுமி பிரதீப் முகர்ஜி விஜயவாடா அழைத்து செல்லப்பட்டார்

மேற்கு வங்கத்தைச் சேர்ந்த பிரதீப் முகர்ஜி இந்தியக் கடற்படையில் விசாகப்பட்டினத்தைத் தளமாகக் கொண்ட கிழக்கு கடற்படையில் மாலுமியாகப் பணியாற்றி வருகின்றார். ரெட் ஃபீல்ட் பகுதியில் உள்ள இந்திய கடற்படை பயிற்சி மையமான ஐ.என். எஸ் அக்ரானியில் பயிற்சிக்கு வந்த 31 வயதான ஆந்திர மாநில கடற்படை அதிகாரி பிரதீப் முகர்ஜி என்பவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

பாகிஸ்தானைச் சேர்ந்த பெண் உளவுத்துறை அதிகாரிக்கு, இந்திய கடற்படை ரகசிய பாதுகாப்புத் தகவல்களைக் கசியவிட்டதாக ஆந்திரப் பிரதேச காவல்துறை நடவடிக்கை எடுத்திருக்கிறது. மேற்கு வங்கத்தைச் சேர்ந்த பிரதீப் முகர்ஜி இந்தியக் கடற்படையில் விசாகப்பட்டினத்தைத் தளமாகக் கொண்ட கிழக்கு கடற்படையில் மாலுமியாகப் பணியாற்றி வருகின்றார். கோவை மிழிஷி அக்ரானியில் நடைபெறும் மேலாண்மை மேம்பாட்டுப் பயிற்சியில் கலந்து கொள்வதற்காக கடந்த ஒரு வாரமாக தங்கி இருந்தார்.

இந்த நிலையில் சமூக ஊடகங்களில் ஒரு பாகிஸ்தானிய பெண் உளவாளி அவரை தொடர்பு கொண்டதாகவும், அந்த உளவாளியிடம் விசாகப்பட்டினம் கடற்படைத் தளத்துடன் தொடர்புடைய தகவல்களை பிரதீப் முகர்ஜி பகிர்ந்து கொண்டதாகவும் சொல்லப்படுகிறது. இந்தப் புகாரின் பேரில், ஆந்திரப் பிரதேச காவல்துறையில் பயங்கரவாதக் குழுக்கள், எல்லை தாண்டிய உளவு மற்றும் உயர் பாதுகாப்பு அச்சுறுத்தல்களைக் கவனம் செலுத்தும் சிமி சிறப்புப் பிரிவு இது குறித்து விசாரித்து வந்தது. அதன்படி, அவரை கைது செய்ய இந்திய கடற்படை அதிகாரிகளிடம் அனுமதி பெற்றனர்.

ஆந்திர மாநில சிமி சிறப்பு குழு சனிக்கிழமை காலை கோவை மிழிஷி அக்ரானியில் வைத்து இந்திய கடற்படை மாலுமி பிரதீப் முகர்ஜியை கைது செய்தனர். தொடர்ந்து அவரை ஆந்திரா மாநிலம் விஜயவாடா அழைத்துச் சென்று விசாரணை நடத்த உள்ளனர்.

# தமிழ்நாடு முழுவதும் தணிக்கை ஆம்னி பஸ்களிடம் ரூ.60 லட்சம் வரி, இணக்க கட்டணம் வசூல்:

## போக்குவரத்து ஆணையர் தகவல்

போரூர்: அக்.5–

தமிழ்நாட்டில் சுமார் 5400 ஆம்னி பேருந்து களுக்கு அனுமதி வழங் கப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. வெளி மாநிலங்களிலிருந்து சுமார் 1000 ஆம்னி பேருந்துகள் தமிழ்நாட்டிற்குள் இயக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், காந்தி ஜெயந்தி, ஆயுத பூஜை மற்றும் விஜயதசமி ஆகிய தொடர் வார விடுமுறையை முன்னிட்டு, ஆம்னி பேருந்துகளில் பொதுமக்கள் மற்றும் பயணிகளிடமிருந்து வழக்கத்திற்கு மாறாக அதிக அளவில் கட்டணம்வசூலிக்கப்படுவதாக புகார் பெறப்பட்டதை தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் அடங்கிய குழு அமைத்து ஆம்னி பேருந்துகளில் தீவிர வாகன தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் முன்னோட்டமாக கடந்த 1ம் தேதி போக்குவரத்துத் துறை அமைச்சர் கோவை, காந்திபுரம் பகுதிகளில் ஆம்னி பேருந்துகளை நிறுத்தி பயணிகளிடம் அதிக கட்டணம் வசூலிக்கப்பட்டதா என்பதை ஆய்வு செய்தார். அதன்படி, நேற்று முன்தினம் தமிழ்நாடு முழுவதும் 2,247 ஆம்னிபேருந்துகள் தணிக்கை செய்யப்பட்டன. இதில் விதிமீறல்கள் கண்டறியப்பட்ட 664 ஆம்னி பேருந்துகளுக்கு தணிக்கை அறிக்கை மற்றும் இசலான் வழங்கப்பட்டு, உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

இந்த தீவிர தணிக்கையின் போது, விதிமீறல்களுக்காக இணக்க கட்டணம் ரூ.11,75,000 நிர்ணயிக்கப் பட்டுள்ளது. ரூ.4,32,670 வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், பிற மாநிலங்களில் பதிவு செய்யப்பட்டு தமிழ்நாட்டில் இயக்கப்பட்ட ஆம்னி பேருந்துகளிடமிருந்து தமிழ்நாட்டிற்கு செலுத்த வேண்டிய வரியாக ரூ.41,15,116 வசூலிக்கப் பட்டது. அபராதமாக ரூ.3,32,000 வசூலிக்கப் பட்டது. இதன் மூலம், நேற்றைய தினம் மட்டும் ஆம்னி பேருந்துகள் தொடர்பாக வரி மற்றும் இணக்கக் கட்டணமாக மொத்தம் ரூ.44,47,116 வசூலிக்கப் பட்டுள்ளது. இதனால் வசூலிக்கப் பட்ட மற்றும் நிர்ணயிக் கப்பட்ட வரி, இணக்க கட்டணம் மொத்தம் ரூ.60,54,786 ஆகும்.

மேற்கண்ட தணிக்கை யின் போது கடந்த 2 நாட்களில் அதிக கட்டணம் வசூலித்ததாக கண்டறியப்பட்ட 11 ஆம்னி பேருந்துகள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ரூ.8450 பயணிகளுக்கு திரும்பப் பெற்று வழங்கப்பட்டது. மேலும், வரி செலுத்தாத மற்றும் தகுதிச் சான்று இல்லாத 8 ஆம்னி பேருந்துகள் சிறை பிடிக்கப்பட்டுள்ளது. ஆம்னி பேருந்துகளில் ஆன்லைன் மூலம் பயணிகளால் பதிவு செய்யப்பட்ட பயணச்சீட்டை வாகன உரிமையாளர் இரத்து செய்யும் நேர்வில் அந்த பயணிகளுக்கு மாற்றுப்பேருந்தில் பயணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும். தவறும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட ஆம்னி பேருந்து அனுமதிச் சான்று ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப் படும். இவ்வாறு போக்குவரத்து ஆணையர் வெளியிட்ட அறிக்கை யில் கூறப்பட்டுள்ளது.

* புகார் அளிக்கலாம்

பொதுமக்கள் மற்றும் பயணிகளின் நலனை கருத்தில் கொண்டு, பண்டிகைக் காலங்களில் ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிப்பதைத் தடுக்கவும், விதிமீறல்களை கட்டுப்படுத்தவும் இந்தச் சிறப்பு வாகனத் தணிக்கை தொடர்ந்து தீவிரமாக வரும் 21ம் தேதி வரை மேற்கொள்ளப்படும். எதிர்வரும் நாட்களில், ஆம்னி பேருந்துகளில் அதிக கட்டணம் வசூலிப்பதாக புகார் வரும் பட்சத்தில், அனுமதி இரத்து போன்ற கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். புகார் தெரிவிக்க வேண்டிய கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 425 6151, செல்போன் எண் 93848 08333 மற்றும் tc.tn@nic.in மின்னஞ்சல் முகவரிக்கு புகார் தெரிவிக்கலாம்.

# திருவண்ணாமலை மாவட்டத்தில்துணை மின் நிலையங்களில் பராமரிப்புப் பணிகளுக்காக 7 மணி நேரம் வரை மின் தடை

திருவண்ணாமலை: திருவண்ணாமலை மாவட்டத்தில் வரும் 6ம் தேதி முதல் 31ம் தேதி வரை 23 துணை மின் நிலையங்களில் பராமரிப்புப் பணிகளுக்காக 7 மணி நேரம் வரை மின் தடை அறிவிக்கப்பட்டுள்ளது. மின்சார பற்றாக்குறையை சமாளிக்க பராமரிப்புப் பணி என்ற பெயரில் மின் தடை நேரம் அதிகரிக்கப்படுகிறதா? என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மின் தடை நேரத்திலும் வி.வி.ஐ.பி வீடுகள், நீதிமன்ற வளாகங்களில் மின்சாரம் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# திருத்தணியில் பக்தர்கள் மீது கோபுரக் கற்கள் விழுந்து விபத்து! 4 பேர் படுகாயம்!

திருத்தணி: அக்.5–

திருத்தணி முருகன் கோயிலில் சாமிதரிசனத்திற்காக காத்திருந்த பக்தர்கள் மீது கோபுர கற்கள் விழுந்த விபத்தில் மூன்று பெண்கள் உட்பட நான்குபேர் படுகாயம் அடைந்திருக்கிறார்கள். அரும்படை வீடுகளில் ஐந்தாம்படை வீடான திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் விடுமுறை நாள் என்பதால் பக்தர்கள் கூட்டம் அதிகமாகவே காணப்பட்டது, பொதுவழியில் சாமிதரிசனம் செய்யும் இடத்திற்கு சென்று கொண்டிருந்த பொழுது பொதுமக்கள் நீண்ட நேரம் காத்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது திடீரென்று காளி கோபுரத்தில் இருந்து சிலைகள் உடைந்து விழுந்து விபத்துக்குள்ளானது.

இதில் மூன்று பெண்கள் உட்பட நான்கு பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இவர்களை அறநிலையத்துறை உடனடியாக மீட்டு 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் திருத்தணி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி மலை கோயிலில் இருந்து அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அங்கு அவர்களுக்கு முதலுதவி சிகிக்சை அளிக்கப்பட்டு தலையில் நன்கு படுகாயம் அடைந்த மூன்று பெண்கள் உட்பட நான்கு பேரையும் திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிக்சைக்காக அனுப்பி வைத்துள்ளனர், முதற்கட்டமாக இவர்கள் ஆந்திரா மற்றும் தமிழகத்தை சேர்ந்த பக்தர்கள் என்றும் தெரிவித்துள்ளனர், மேலும் இது தொடர்ந்து காவல்துறையினர், இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# கீழ்குப்பத்தில் குடிநீரில் நுரை: உடனடி நடவடிக்கையால் பிரச்சினைக்கு தீர்வு





கிருஷ்ணகிரி மாவட்டம், கீழ்குப்பம் கிராமத்தில் குடிநீரில் நுரை கலந்து சுகாதாரமற்ற நிலையில் தண்ணீர் வருவதாக பொதுமக்கள் புகார் தெரிவித்தனர்.

இதுகுறித்து தகவலறிந்த ஊராட்சி செயலாளர் வெங்கடேசன் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு, குடிநீர் விநியோகத்தில் ஏற்பட்ட கோளாறுகளை சரிசெய்தார். தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பராமரிப்பு பணிகளால் குடிநீர் விநியோகம் சீரமைக்கப்பட்டு, பொதுமக்களுக்கு சுத்தமான குடிநீர் மீண்டும் வழங்கப்பட்டது. குடிநீர் பிரச்சினைக்கு விரைந்து நடவடிக்கை எடுத்த ஊராட்சி நிர்வாகத்திற்கு கிராம மக்கள் நன்றி தெரிவித்தனர். மேலும், குடிநீர் விநியோகம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# முதல்வர் தனிப்பிரிவு, கலெக்டரின் குறைதீர் கூட்டம், ஜமாபந்தி குறித்து தகவல் அறியும் சட்டத்தின்கீழ் அனைவரும் தகவல் பெறலாம்: மாநில தகவல் ஆணையம் விளக்கம்

சென்னை: அக்.5–

திருவண்ணாமலையை சேர்ந்த கோபிநாத், மாவட்ட குறைதீர் முகாமில் கலெக்டரிடம் அளித்த மனு மீது நடவடிக்கை எடுக்காததால் மனுவின் நிலை குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் விளக்கம் கேட்டு பொது தகவல் அதிகாரிக்கு 2024ம் ஆண்டு மனு அளித்தார். ஆனால், பொது தகவல் அதிகாரி தரப்பில் உரிய பதில் அளிக்காததால், தமிழ்நாடு மாநில தகவல் ஆணையத்தில் கோபிநாத் புகார் அளித்தார். இந்த புகார் குறித்து ஆணையர் வி.பி.ஆர்.இளம்பருதி விசாரணை செய்தார். அப்போது, முதலமைச்சர் தனிப்பிரிவு, மாவட்ட குறைதீர் கூட்டம் மற்றும் ஜமாபந்தி மனுக்கள் குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்க முடியாது என்று மனுதாரருக்கு மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கப்பட்டதாக பொது தகவல் அதிகாரி அறிக்கை தாக்கல் செய்தார்.

புகாரை விசாரித்த ஆணையர் வி.பி.ஆர். இளம்பருதி, அனைத்து தகவல்களையும் பெற இந்திய குடிமக்களுக்கு உரிமை உள்ளது. முதலமைச்சர் தனிப்பிரிவு, மாவட்ட குறைதீர் கூட்டம் மற்றும் ஜமாபந்தி குறித்து தகவல்களை பெற முடியாது என்பது குறிப்பிட்ட வழக்குகளுக்கு மட்டுமே பொருந்தும். முதலமைச்சரின் தனிப்பிரிவு, மாவட்ட குறைதீர் கூட்டம் மற்றும் ஜமாபந்தி குறித்து பொது தகவல் அதிகாரி வரம்பிற்குள் வரும் என்பது தெளிவாகிறது.

பொது தகவல் அமைப்பின் கீழ் வரும் தகவலை தர மறுத்த பொது தகவல் அதிகாரியின் செயல் கண்டனத்துக்கு உரியது. மனுதாரரின் கேள்விகளை சிந்தித்து உள்வாங்காமல் மனுவை நிராகரித்ததை ஏற்க முடியாது. பொது அதிகார அமைப்பின் கீழ் ஆவணம் மற்றும் மின்னணு முறையில் உள்ள ஆவணங்களை அனைவரும் பெறலாம். அதனால், முதலமைச்சர் தனிப்பிரிவு, மாவட்ட குறைதீர் கூட்டம் மற்றும் ஜமாபந்தி மற்றும் இன்ன பிற அதிகாரி அமைப்பு குறித்து தகவல்களை பெற மனுதாரருக்கு முழு உரிமை உண்டு.

திருவண்ணாமலை மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி, மாவட்டத்தில் உள்ள பொது தகவல் அதிகாரிகளுக்கு தகவல் அறியும் உரிமை சட்டம் குறித்து பயிற்சி நடத்தி அதன் அறிக்கையை அக்டோபர் 14ம் தேதி ஆணையத்தில் நேரில் ஆஜராகி தாக்கல் செய்ய வேண்டும்.மனுதாரருக்கு உரிய தகவலை வழங்காத பொது தகவல் அதிகாரிவி.ஜெயபாலுக்கு நாள் ஒன்றுக்கு 250 ரூபாய் வீதம் 25,000 ரூபாய் அபராதமாக ஏன் விதிக்கக்கூடாது என்று அக்டோபர் 14ம் தேதி நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும். இந்த உத்தரவை அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அதிகாரிகளுக்கும் சுற்றறிக்கையாக பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் அனுப்ப வேண்டும். இந்த உத்தரவு அனைத்து பொது அதிகார அமைப்புக்கும் பொருந்தும் என்று உத்தரவிட்டுள்ளார்.

# ஈரோடு மாவட்டம் லக்காபுரம் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டம்..

## ஈரோடு மாநகராட்சி ஆணையாளர், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பு..




ஈரோடு. அக். 05

ஈரோடு மாவட்டம் லக்காபுரம் ஊராட்சியில் காந்தி ஜெயந்தி அன்று சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இதில் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அரபிக் ஜெயின் கலந்து கொண்ட நிலையில் திரளான பொதுமக்களும் பங்கேற்றனர்.

நம் தேசப்பிதா அண்ணல் காந்தியடிகள் அவர்களின் 157 வது பிறந்த தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் காந்தி ஜெயந்தியாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த வகையில் ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டம் சிறப்பாக நடைபெற்றது.

இதன்தொடர்ச்சியாக ஈரோடு அருகே உள்ள மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட லக்காபுரம் ஊராட்சியில் அண்ணல் காந்தியடிகளின் 157 வது பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற கிராம சபை கூட்டம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்த கிராம சபை கூட்டத்தில் ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அரபித் ஜெயின் கலந்துகொண்டு ஊராட்சியின் செயல்பாடுகள், திட்டங்கள் குறித்தும் ஊராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் ஆணையாளர் ஆய்வு செய்தார்.

கிராம சபை கூட்டத்தை முன்னிட்டு ஊர் பொதுமக்கள், சிங்கப்பெண் அதிரடிப் படையை சேர்ந்த காவலர்கள், ஈரோடு காக்கும் கரங்கள் மக்கள் நல அறக் கட்டளையின் நிறுவன தலைவர் சாந்தா தேவி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முப்பெரும் விழாவில் உத்தமர் காந்தி விருது..!







வந்தவாசி, அக் 05:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீகிருஷ்ணா கல்வி மையம் சார்பில் காந்தி ஜெயந்தி விழா, உலக முதியோர் தின விழா, தமிழக அரசின் டாக்டர் இராதாகிருஷ்ணன் நல்லாசிரியர் விருது பெற்ற தலைமை ஆசிரியருக்கு பாராட்டு விழா உள்ளிட்ட முப்பெரும் விழாவாக அச்சரப்பாக்கம் சாலை, ரோட்டரி கிளப் அரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு சமூக ஆர்வலரும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி மாவட்ட தலைவருமான டி.எம். பீர்முகம்மது தலைமை தாங்கினார். கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன் வரவேற்றார். ஜவகர் சிறுவர் மன்றம் திட்ட ஒருங்கிணைப்பாளர் பெ.பார்த்திபன் முன்னிலை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராக, மேனாள் மாவட்ட மருத்துவ இணை இயக்குநர் டாக்டர் எஸ்.குமார் பங்கேற்று சிறப்புரை ஆற்றி, பல்வேறு சமூக சேவைகளை ஆற்றிய மேனாள் மாவட்ட அரிமா சங்கத்தின் ஆளுநர் வி.எஸ்.தளபதி அவர்களுக்கு உத்தமர் காந்தி விருதை வழங்கினார். மேலும் ‘காந்தியும், அகிம்சையும்“ என்ற தலைப்பில் விருதாளர் சிறப்புரை வழங்கினார். நிகழ்வில் பல்திறன் போட்டிகளில் பங்கேற்ற மாணவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது. நிகழ்வில் ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் ஆ.மயில்வாகனன், கவிஞர் தமிழ்ராசா, வந்தை வட்ட கோட்டை தமிழ்ச் சங்க தலைவர் பீ.ரகமத்துல்லா, சுவாமி விவேகானந்தா தொண்டு மைய நிறுவனர் டாக்டர் ம.சுரேஷ் பாபு, கற்க கசடற அமைப்பு நிர்வாகி இரா.பாஸ்கரன், தலைமை ஆசிரியர் க.வாசு, ஓய்வுபெற்ற ஆசிரியர் ப.சக்ரவர்த்தி, சமூக ஆர்வலர் பையூர் விஜயகுமார், தலைமை ஆசிரியை எம்.சாந்தி உள்ளிட்ட பலரும் வாழ்த்துரை வழங்கினர். வந்தை முன்னேற்ற சங்க தலைவரும், திரைப்பட இயக்குநருமான வந்தை பிரேம், புலவர் ஏழுமலை, இயக்குநர் விஜய் ஆதிநாதன், கலைஞர் முத்தமிழ் சங்க தலைவர் வந்தை குமரன், கிழங்குனம் ஊராட்சி பள்ளி பொறுப்பு தலைமை ஆசிரியர் சரவணன், எக்ஸ்னோரா மாவட்ட பொறுப்பாளர் மலர் சாதிக், முகமது ஜியா, வாரியார் அறக் கட்டளை நிர்வாகிகள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர். முன்னதாக, பட்டதாரி ஆசிரியர் ஆர்.எஸ். சிவக்குமார் நாட்டுப்புற பாடல்களை பாடினார். இறுதியில் உத்தமர் காந்தி விருது பெற்ற அரிமா வி.எஸ். தளபதி ஏற்புரை நிகழ்த்தினார். நிகழ்வை சமூக ஆர்வலர் கேப்டன் பிரபாகரன் தொகுத்து வழங்கினார். இறுதியில் கல்வி மைய ஆசிரியர் மஹாவீர் நன்றி கூறினார்.

# ஊத்தங்கரையில் தமிழக வாழ்வுரிமைக் கட்சி புதிய பொறுப்பாளர்கள் அறிமுக கூட்டம்



கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையில் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் புதிய பொறுப்பாளர்கள் அறிமுக கூட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் விஜய் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் சாகுல், அமைப்பு செயலாளர் சுரேஷ்குமார், மாவட்ட பொருளாளர் முகமது அசாருதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மண்டல செயலாளர் மு.நெப்போலியன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.

ஊத்தங்கரை மேற்கு ஒன்றிய செயலாளர் எழில், மாவட்ட துணை செயலாளர் தமிழரசன், மாவட்ட இளைஞர் அணி செயலாளர் வினோத், ஊத்தங்கரை மேற்கு ஒன்றிய தலைவர் சக்திவேல், மத்தூர் ஒன்றிய துணைச் செயலாளர் முபாரக் மற்றும் திருப்பதி லத்தீப் அப்துல் ரஹீம் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் ஊத்தங்கரை கிழக்கு ஒன்றிய செயலாளர் திருப்பதி நன்றி உரையாற்றினார்.

புதிதாக பொறுப்பேற்ற நிர்வாகிகள் பெரியார் சிலை மற்றும் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து, பட்டாசு வெடித்து கொண்டாடினர்.

# நெல்லையில் மாணவர்கள் கள ஆய்வில் ஆச்சரியம் கீழடியை விட பெரிய செங்கல் கட்டுமானங்கள் கண்டெடுப்பு:



நெல்லை: அக்.5–

நெல்லைக்கு அருகே உள்ள சீவலப்பேரியை அடுத்த குப்பக்குறிச்சி கிராமம் வழியாக தாமிரபரணி ஆற்றின் கிளை ஆறான சிற்றாறு செல்கிறது. இந்த ஆற்றை ஒட்டியப் பகுதியில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முதலாமாண்டு முதுகலை தொல்லியல் பயிலும் காலபொருமாள் என்ற மாணவர், பழங்கால மக்கள் வாழ்ந்ததற்கான தொல்பொருள் எச்சங்களை கண்டெடுத்து பேராசிரியர்களிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து தொல்லியல் துறைத் தலைவர் (பொறுப்பு) சுதாகர், துறை பேராசிரியர்கள் முருகன், மதிவாணன் மற்றும் மாணவ,மாணவிகளுடன் அந்த பகுதிக்கு நேரில் சென்று கள ஆய்வில் ஈடுபட்டனர். இந்த ஆய்வின் போது, இரண்டடி விட்டமுள்ள உறை கிணறுகள், பழங்கால பாசி மணிகள், அழகான வட்டச் சில்லுகள், சுடுமண் காதணிகள், பூ வேலைப்பாடுகள் கொண்ட பானையின் உடைந்த பாகங்கள், செம்பு மற்றும் சுடுமண் வளையல் துண்டுகள், தக்களிகள் மற்றும் பழங்கால செங்கல் கட்டுமானங்களையும் கண்டறிந்து ஆச்சரியமடைந்தனர்.

இந்தக்கட்டுமானத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள செங்கல்கள் 30 சென்டிமீட்டர் அகலமும், 9 சென்டிமீட்டர் உயரமும், 39 சென்டிமீட்டருக்கும் அதிகமான நீளமும் கொண்டுள்ளன. கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட செங்கற்கள் 24 செ.மீ அகலமும், 6 செ.மீ தடிமனும், 36 செ.மீ நீளமும் கொண்டவை. இதன் மூலம் குப்பக்குறிச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட செங்கல்கள், கீழடியை விட அளவில் சற்று பெரியவை என்பது உறுதியாகி உள்ளது.

இதே போன்ற மற்றொரு செங்கல் கட்டுமானத்தை குப்பக்குறிச்சியில் இருந்து தெற்கே அமைந்துள்ள மடத்துபட்டி கிராமத்தில் உள்ள முண்டன் கோயிலுக்கு அருகேயும் பல்கலை., தொல்லியல் துறையினர் கண்டெடுத்தனர். ஆனால், நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் விரிந்து கிடக்கும் இந்த பழமையான தொல்லியல் மேடுகளில், செங்கல் உற்பத்திக்காக அதிகளவில் மண் அள்ளப்படுவதால் வரலாற்று சிறப்புமிக்க தடயங்கள் பெருமளவில் அழிந்து விட்டன. மிகச்சிறிய அளவிலான தொல்பொருட்கள் உள்ள பகுதி மட்டுமே தற்போது எஞ்சியுள்ளது.

சிற்றாற்றை ஒட்டிய குப்பக்குறிச்சியில் இருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் தான் தாமிரபரணி ஆற்றின் கரையோரத்தில் ஆதிச்சநல்லூர் அமைந்துள்ளது. அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்விடம் இன்றும் முழுமையாக கண்டறியப்படாத நிலையில், இந்த புதிய கண்டுபிடிப்பு முக்கியத்துவம் பெறுகிறது என்கின்றனர் தொல்லியல் வல்லுனர்கள். கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை ஆய்வு செய்த தொல்லியல் பேராசிரியர்கள் முருகன் மற்றும் மதிவாணன் ஆகியோர், இவை அனைத்தும் சுமார் 1000 முதல் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்றனர்.

# குரோம்பேட்டை அருகே சோகம்: ஏரியில் மூழ்கி 4 சிறுவர்கள் பலி: உடல்கள் மீட்பு

தாம்பரம்: அக்.5–

குரோம்பேட்டை அருகே திருநீர்மலை ஏரியில் குளித்த 2 சிறுவர்கள், 2 சிறுமிகள் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. குரோம்பேட்டை லட்சுமிபுரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த 4 பள்ளி மாணவ, மாணவிகள் நேற்று மதியம் வீட்டின் அருகே விளையாடிக்கொண்டிருந்தனர். பின்னர், அவர்கள் அருகில் உள்ள திருநீர்மலை பெரிய ஏரி பகுதிக்கு சென்றதாக கூறப்படுகிறது. நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாததால், பெற்றோர் மற்றும் உறவினர்கள் பல்வேறு இடங்களில் தேடினர். இதற்கிடையே, இன்று காலை ஏரி பகுதியில் 4 பேரின் உடல்கள் நீரில் மிதந்த நிலையில் இருந்ததை அப்பகுதி மக்கள் பார்த்து போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து குரோம்பேட்டை காவல் நிலைய போலீசார் மற்றும் தாம்பரம் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று 4 பேரின் உடல்களையும் மீட்டனர். பின்னர், பிரேத பரிசோதனைக்காக தாம்பரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பினர். விசாரணையில், உயிரிழந்தவர்கள் குரோம்பேட்டை லட்சுமிபுரம் பகுதியை சேர்ந்த யுவனேஷ் (10), தேவதர்ஷன் (12), பூஜா (13) மற்றும் குஷி (13) என்பது தெரியவந்தது. இதில், யுவனேஷ் 6ம் வகுப்பும், தேவதர்ஷன் 7ம் வகுப்பும், பூஜா மற்றும் குஷி ஆகியோர் 8ம் வகுப்பும் படித்து வந்ததாக போலீசார் தெரிவித்தனர்.

பள்ளி விடுமுறை நாளான நேற்று 4 பேரும் ஏரியில் குளித்த போது, சேற்றில் சிக்கி நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். ஒரே பகுதியில் வசித்து வந்த 4 பள்ளி மாணவமாணவிகள் ஏரியில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் குரோம்பேட்டை பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# வீரர்களுக்கு வழங்கப்படும் அங்கீகாரம் பயிற்சியாளர்களுக்கும் கிடைக்க வேண்டும்:

## ஆசிய போட்டியில் தங்கம் வென்ற வித்யா கோரிக்கை




கோவை: அக்.5–

கோவையைச் சேர்ந்த தடகள வீராங்கனை வித்யா ராம்ராஜ் ஆசிய போட்டியில் தங்கம் வென்று நேற்று விமானம் மூலம் கோவை திரும்பினார். அவருக்கு அமைச்சர் ஆனந்த் மற்றும் அவரது குடும்பத்தினர் பொன்னாடை அணிவித்து வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து வரவேற்றனர். பின்னர் வித்யா ராம்ராஜ் நிருபர்களிடம் கூறியதாவது: பி.டி. உஷாவின் சாதனையை முறியடித்திருப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

இதற்காக மாநில அரசு மற்றும் விளையாட்டுத் துறைக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன்.தற்போது ரயில்வே துறையில் பணியாற்றி வருகிறேன். ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் எனக்கு அளித்த ஆதரவால் இந்த நிலையை அடைந்துள்ளேன். கடந்த போட்டியைவிட இந்தப் போட்டியில் கடுமையாக உழைத்தேன். 2023லிருந்து சாதனையை முறியடிக்கும் நோக்கத்துடன் பயிற்சி மேற்கொண்டேன்.

பதக்கத்தை இலக்காகக் கொள்ளாமல், நேரத்தை மேம்படுத்துவதே எங்களது முக்கிய நோக்கமாக இருந்தது. இந்தியா இன்னும் உலக அளவில் போட்டியிட வேண்டிய நிலையில் இருக்கிறது. தற்போதைய சாதனை எனக்கு முழுமையான நிறைவை அளிக்கவில்லை. தமிழ்நாடு விளையாட்டுத் துறை அமைச்சர் தொடர்ந்து முழுமையான ஆதரவு அளித்து வருகிறார். இளம் விளையாட்டு வீரர்கள் பெற்றோர் மற்றும் பயிற்சியாளர்களை நம்பி தீவிரமாகப் பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

ஒரு விளையாட்டு வீரரின் வெற்றிக்குப் பின்னால் பயிற்சியாளர்களின் பங்களிப்பு முக்கியமானது. விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் அங்கீகாரம், பயிற்சியாளர்களுக்கும் கிடைக்க வேண்டும். இதுகுறித்து முதல்வரிடமும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. விளையாட்டு வீரர்களுக்கு பதக்கங்கள் வழங்கும்போது பயிற்சியாளர்களுக்கும் பதக்கங்கள் வழங்கப்படும் என முதல்வர் தெரிவித்துள்ளார். இவ்வாறு அவர் கூறினார்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421, 9750589992